1973 மார்ச் 6]

திரு. என். கே. பழனிசாமி : கெஸட்டில் பப்ளிஷான பிறகு எவ்வளவு மாதங்களுக்குள் அவர்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்படும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : விவரம் இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is it a fact that some of the Harijans to whom plots have been allotted in these places have not constructed houses for want of amenities?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தற்சமயம் கூறிய இடங்களில் எல்லாம் இப்போதுதான் கையகப்படுத்தப்பட்டு சில யிடங்களில் கெட்டில் பட்டா வழங்கப்பட்டுள்ளன, சிலயிடங்களில் வழங்கப்படயிருக்கின்றன. இதற்குள் வீடு கட்டி முடிக்கப்பட வில்லையே என்று குறை சொல்ல முடியாது.

திரு. என். கே. பழனிசாமி : கெஸட்டில் வெளியிடப்பட்டுள்ள தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கெஸட்டில் பப்ளி ஷான பிறகு குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்படவேண்டும். அது எப்போது நடக்கும்? பலயிடங்களில், மாவட்டங்களானாலும் சரி அல்லது வட்டங்களானாலும் சரி எற்கனவே ஹரிஜனங்களுக்கு விட்டு நிலம் வாங்குவதற்கு போதுமான தொகை ஒதுக்கப்படாததன் காரண மாக, கோவை மாவட்டத்தில் மட்டுமல்ல, எல்லா மாவட்டங் களிலிருந்தும் வந்திருக்கின்றன பல கேள்விகள், ஹரிஜனங் களுக்கு நிலம் வாங்கிக் கொடுப்பதற்கு போதுமான தொகை ஒதுக்கப்படாததன் காரணமாக இந்தமாதிரி சங்கடங்கள் ஏற்படுகின்றன. எனவே ஹரிஜனங்களுக்காக செலவு செய்யும் பற்றச் செலவுகளைக் குறைத்துக்கொண்டு வீட்டு மனைகளாவது வாங்கிக் கொடுக்க சர்க்கார் முயற்சி எடுப்பார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பிலயிடங்களில் கோர்ட் கேஸ்கள், வழக்குமன்றத்தில் இருந்து ஸ்டே வாங்கி விடுகிறார்கள். நோட்டிபிக்கேஷன் ஆன பிறகும்கூட அவர்கள் நிலத்தைக் கொடுப்பதில் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். அவ்வப் போது நிலச் சொந்தக்காரர்களின் உரிமையை நாம் பரிசீலிக்க வேண்டியிருப்பதால் தாமதமாகிறது. சில மாவட்டங்களில் பணப் பற்றுக்குறை காரணமாக நிலம் கையகப்படுத்துவதில்

காலதாமதமாகிறது. இருந்தாலும் அடுத்தடுத்து வருகிற ஆண்டுகளில் அவைகளைப் பூர்த்தி செய்து வருகிறோம்.

திரு. த. சோனையா : ஹரிஜனப் பெருமக்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிற காரணத்தினால் அந்த இடங்களின் சொந்தக்காரர்கள் இடையிலே மின்சாரக் கம்பங்களை நட்டு பக்கத்திலுள்ள வீடுகளுக்கு மின்சாரத்தை இழுத்துக்கொண்டுவிடுவதால், மின்சாரக் கம்பிகள் இருக்கும் இடங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்யக்கூடாது என்ற நிலை இருப்பதால் அவர்கள் அப்படிச் செய்து விடுகிறார்களே, அதைத் தடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மின்சார இணைப்பு மாத்திரமல்ல, சிலயிடங்களில் சொந்தக் கோவில்கள் கட்டி விடுகிறார்கள், வீடுகள் கட்ட ஆரம்பிக்கிறார்கள். பிறகு வாழை, வரகு போன்ற குறுகிய காலப் பயிர்களை வைக்க ஆரம்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட முயற்சிகளில் நிலச் சொந்தக்காரர்கள் ஈடுபடுவதால் நிலங்களை ஆர்ஜிதம் செய்கிற பணி தாமதப் படுகிறது. இருந்தாலும் எவ்வளவு விரைவுபடுத்தவேண்டுமோ அந்த அளவிற்கு விரைவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து நிலங்களை கையகப்படுத்தி, பணம் கொடுத்து நிலங்களை வாங்கிக் கொடுக்கிறது. எனவே கூடுமான வரையில் நிலச் சொந்தக்காரர் களிடத்தில் முக்கியமானவர்கள் சென்று குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள்கூட சென்று அந்த நிலங்களைக் கொடுப்பதில் அவர் களிடம் சமரசமான முறையில் பேசி, நிலம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களேயானால் தாமதங்கள் அதிகம் இருக்காது குறையும்.

நந்தன்கோட்டை-மேட்டுமகாதானபுரம் இணைப்புச்சாலை

***255 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டத்திலுள்ள நந்தன் கோட்டை, மேட்டு மகாதானபுரம் ஆகிய இரு கிராமங்களில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் வசதிக்காக இணைப்புச்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

1973 மார்ச் 6]

(இ) ஆம் எனில், தற்போது அத்திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

அரிசன மாணவர் விடுதிகளுக்குக் கட்டடங்கள்

* 256 வினா—திரு. மூ. மாரிமுத்து : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தம்மம்பட்டி, செங்கல்லி, ஆறகளூர் ஆகிய இடங்களில் உள்ள மாணவரில்லங்களுக்கு சொந்தத்தில் கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது கட்டடங்கள் கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) அரசின் ஆய்வில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. நாகராஜன் : உயர்நிலைப் பள்ளிகள் உள்ள எல்லா இடங்களிலும் இதுபோன்ற விடுதிகளை விரைந்து ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் தாழ்த்தப்பட்ட, பின் தங்கிய வகுப்பினருக்கு விடுதிகள் கட்டுவதற்காக இரண்டு கோடி ரூபாய் வங்கிகள் மூலம் கடன் உதவி பெற்று விடுதி கட்டுவதற்கான திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் நிறைவேறும்போது, கூடுமானவரையில் ஹரிஜன மாணவர்களுக்கு விடுதிகள் கட்டிக்கொடுக்கிற திட்டம் விரைவு படுத்தப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்த ஹரிஜன ஹாஸ்டல்களுக்கு கட்டடங்கள் ஹரிஜன வெல்பேர் பண்டிலிருந்து கட்டுவது என்பது நீண்ட நாட்களாகும் என்பதால் ஹௌஸிங் போர்ட்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS